செ. கு. எண்:067 நாள்: 30.06.2019

<u>மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **திரு.எடப்பாடி K.பழனிசாமி** அவர்களின்</u>

<u>அறிக்கை – 30.6.2019</u>

கோயம்புத்தூர் மாவட்டம், கோயம்புத்தூர் தெற்கு வட்டம், கோயம்புத்தூர் டவுன் பகுதியைச் சேர்ந்த திருமதி பைரோஜி பேகம் என்பவரின் குடும்பத்தைச் சேர்ந்த 12 நபர்கள் ஒரு குடும்ப நிகழ்ச்சியில் கலந்து கொள்வதற்காக ஆம்னி வேனில் பாலக்காடு நோக்கி சென்று கொண்டிருந்த போது, இன்று (30.6.2019) அதிகாலை எதிர்பாராத விதமாக ஏற்பட்ட சாலை விபத்தில் வேன் ஓட்டுநர் திரு. ஷாஜஹான் த.பெ. சம்சுத் கனி, திரு. அப்துல் மஜித் (லேட்) என்பவரின் மனைவி திருமதி பைரோஜி பேகம், திரு. காதர் மொய்தீன் என்பவரின் மகன் செல்வன் ரியான், திரு. காதர் மொய்தீன் என்பவரின் மகள் செல்வி ஷெரின் மற்றும் திரு. சையது முஹம்மது என்பவரின் குழந்தை அப்னா பிர்ஜா ஆகிய ஐந்து நபர்கள் சம்பவ இடத்திலேயும், திரு. முஹம்மது நிசார் என்பவரின் மகன் செல்வன் மொகம்மது ரித்வான் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி உயிரிழந்தனர் என்ற செய்தியை அறிந்து நான் மிகுந்த வேதனை அடைந்தேன்.

சாலை விபத்தில் உயிரிழந்த மேற்கண்ட 6 நபர்களின் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த சாலை விபத்து குறித்து அறிந்தவுடன் இந்த விபத்தில் இறந்தவர்களின் குடும்பத்தினரை சந்திந்து ஆறுதல் கூறவும், அவர்களுக்கு தேவையான உதவிகளை செய்யவும், காயமடைந்தவர்களுக்கு உயரிய சிகிச்சை அளிப்பதை உறுதி செய்யவும் மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்பு திட்டச் செயலாக்கம் துறை அமைச்சர் திரு. எஸ்.பி வேலுமணி அவர்களுக்கும் கோயம்புத்தூர் மாவட்ட நிருவாகத்திற்கும் நான் உத்தரவிட்டேன்.

மேற்கண்ட சாலை விபத்தில் **உயிரிழந்த 6 நபர்களின் குடும்பங்களுக்கு தலா இரண்டு லட்சம் ரூபாயும்; பலத்த காயமடைந்தவர்களுக்கு தலா 50,000/– ரூபாயும், லேசான காயமடைந்தவர்களுக்கு தலா 25,000/– ரூபாயும்** முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**K.பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**